கட்டுரை எழுதுக.

நான் விரும்பும் கவிஞர் – பாவேந்தர் பாரதிதாசன்

முன்னுரை :

"எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்!' என முழங்கும் காலம் இக்காலம். இந்த முழக்கத்திற்கு மூலமாக இருந்த பெருமக்களுள் பாவேந்தர் பாரதிதாசனார் குறிப்பிடத்தக்கவர். இவரே நான் விரும்பும் கவிஞர் ஆவார்.

பிறப்பும் இளமையும் :

கனகசுப்புரத்தினம் என்னும் இயற்பெயர் கொண்ட பாரதிதாசனார் 29-04-1891-இல் கனகசபை – இலக்குமி அம்மையாருக்கு மகனாய்ப் புதுச்சேரியில் பிறந்தார். இளமையிலேயே பிரெஞ்சு மொழியையும், தமிழையும் பயின்றார். 18-ஆம் வயதில் அரசினர் பள்ளியில் தமிழாசிரியராய் அமர்ந்தார். மகாகவி பாரதியாரிடம் கொண்ட அன்பால் தம் பெயரைப் பாரதிதாசன் என வைத்துக் கொண்டார்.

தமிழ்ப்பற்று:

"தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

போன்ற கவிதை வரிகள் பாரதிதாசனின் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்துவன.'தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்' என முழங்கினார். "தமிழகத்தின் தமிழ்த்தெருவில் தமிழ்தான் இல்லை' என வருந்தினார்.

கவிச்சுவை :

இயற்கையில் ஈடுபாடு மிக்க பாவேந்தரின் கவிதைகள் கருத்தாழமும் கற்பனைச் சுவையும் கொண்டு கற்போரைக் களிப்புறச் செய்பவை, 'நீலவான் ஆடைக்குள் உடல் மறைந்து நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை' எத்தனை அழகான கற்பனை. இது இவரின் கவிச்சுவைக்குச் சான்று.

சமுதாயப் பார்வை.

'சாதி இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே' எனச் சாதி வெறியைச் சாடினார்.

"எல்லார்க்கும் எல்லாம் என்று இருப்பதான

இடம் நோக்கி நடக்கின்ற திந்த வையம்'

என்ற பொதுவுடைமைக் கருத்துக்குச் சொந்தக்காரர் பாவேந்தர்.

முடிவுரை:

உடல்வளமும், உளத்திடமும், உண்மை உரைக்கும் பண்பும், நேர்மையும், மொழிப்பற்றும், இனப்பற்றும் கொண்ட பாவேந்தரின் கனவுகளை நனவாக்குவதே நமது கடமை.